

நாகை மாவட்டம் கீழையூர் ஒன்றியம் காமேஸ்வரம் கிழக்கு தூயசெபஸ்தியர் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் அரசு உதவிப் பெறும் பள்ளிகளுக்கு விரிவு படுத்தப்பட்ட முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜானிடாம்வர்கிஸ் ஆகியோர் தொடங்கி வைத்தனர். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர் ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன், ஒன்றியக் குழு தலைவர் செல்வராணிஞானசேகரன் மற்றும் பலர் உள்ளனர்.

## பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில்,

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு பெருவிழா பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### ஆ.இராசா எம்.பி. - கே.என்.அருண்நேரு எம்.பி. சிறப்புரை! மாவட்டச் செயலாளர் வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், ஜூலை 18 -

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் 100! நூற்றாண்டு நிறைவு பெருவிழா பொது உறுப்பினர்கள் கூட்டம் பூமணம் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

ஆ.இராசா.எம்.பி. கே.என்.அருண்நேரு.எம்.பி. சிறப்புரையாற்றினார்கள்.

மாவட்ட கழகச் செயலாளர் வீ.ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் வி.எஸ்.பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், ந.ஜெகதீஷ்வரன், எஸ்.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், அழகு.நீலமேகம், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்டப் பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞர் ப.செந்தில்நாதன், தொ.மு.ச.மு.ராஜகாந்தம், வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், துணை தலைவர் எம்.ரெங்கராஜ், அரும்பாவூர் பேரூர் கழக செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், பூலாம்பாடி பேரூர் கழக செயலாளர் செல்வலட்சுமி சேகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து. ஆதவன்(எ)ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணி யன், ஆர்.அருண், மா.பிரபா கரன், தொ.மு.ச. மாவட்ட கவுண்சில் பேரவை தலைவர் கே.கே.எம்.குமார், தொ.மு.ச. கவுண்சில் பேரவை மாவட்ட செயலாளர் ஆர்.ரெங்கசாமி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் முத்தரசன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி (எ) அப்துல்பாரூக், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.வேணுகோபால், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ஆர்.தங்கராசு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர்.முருகேசன், மாவட்ட மகளிர் அணி விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ.கார்மேகம், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், தலைமை கழக பேச்சாளர்கள் எசனை ஆறுமுகம், மு.விஜயரத்தினம்,

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.ராசா, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், வழக்கறிஞர் கண்ணன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் நன்றியுரையாற்றினார்.

இந்த கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

அது வருமாறு:

அரசுப்பள்ளிகளில் காலை உணவு திட்டம் வழங்கியதுபோல, அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலை உணவு திட்டம் வழங்கி கல்விக்கு கண் திறந்த தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களை இந்த செயற்குழு பாராட்டி மகிழ்கிறது.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், பெரம்பலூர் நாடாளுமன்ற தொகுதியில் உள்ள ஆறு சட்டமன்ற தொகுதிளில், கே.என்.அருண்நேருவிற்கு அதிகளவில் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதியில் 85 ஆயிரம் வாக்குகள் பெற்றுத் தந்த பெரம்பலூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள அனைத்து நிலை நிர்வாகிகளுக்கு பாராட்டையும், வாக்களித்த வாக்காளர்களுக்கு இந்த செயற்குழு நெஞ்சார்ந்த நன்றி யையும் தெரிவித்துக் கொள்கிறது.

கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழ் பரப்பும் வகையில் கிராமங்கள் தோறும் பட்டிமன்றம், கருத்தரங்கம், பொதுக்கூட்டம், தெருமுனைக் கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்று அனைத்து நிலை நிர்வாகிகளையும் இந்த செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

நீலகிரி நாடாளுமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி.,

சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற தொல்.திருமாவளவன் ஆகியோரை வெற்றி பெற செய்த அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும், வாக்களித்த வாக்காளர்களுக்கும் இந்த செயற்குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் அன்னியூர் சிவா அவர்களை வெற்றி பெற செய்த அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும், வாக்களித்த தொகுதி மக்களுக்கும் இந்த செயற்குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

இரங்கல் தீர்மானங்கள்!

கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா. எம்.பி. உதவியாளர் சிதம்பரம் மனைவி சௌந்தரம் மறைவிற்கும், மாவட்ட துணைச் செயலாளர் நூருல்ஹிதா இஸ்மாயில் சகோதரர் முகமது யாகூப் மறைவிற்கும், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் சி.காட்டுராசா தந்தை சின்னப்பிள்ளை மறைவிற்கும், ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம், ஆதனூர் ஊராட்சி மதுரா குடிக்காடு கிளைச் செயலாளர் பழனியப்பன் மறைவிற்கும், வேப்பூர் வடக்கு ஒன்றியம், வடக்கலூர் அக்ரகாரம் கிளைச் செயலாளர் சின்னதுரை சகோதரர் கனகசபை மறைவிற்கும், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய மாணவர் அணி துணை அமைப்பாளர் இளஞ்செழியன் தாயார் அடைக்கம்பட்டி செல்வம் மறைவிற்கும்,

வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம், காந்தி நகர் கிளைச் செயலாளர் செல்வன் தாயார் ராஜேஸ்வரி மறைவிற்கும் இரங்கல் தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



தஞ்சாவூர் தெற்கு மாவட்ட தி.மு.க. மருத்துவர் அணி சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, பட்டுக்கோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமை மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ திறந்து வைத்தார். உடன் பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் என்.அசோக்குமார், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் மரு.அஞ்சுகம் பூபதி, நகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.என்.செந்தில்குமார், ஒன்றியச் செயலாளர் பா.இராமநாதன், நகர்மன்ற தலைவர் செ.சண்முகப்பிரியா, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் வி.சௌந்தர்ராஜன், அணி தலைவர் குணசேகரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் முதல்வர் அவர்களின் திட்டமான பள்ளி மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு திட்டம் வழங்கும் திட்டம் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவுத் திட்டம் துவக்கப்பட்டது. இதனை தொடர்ந்து கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதி, எலத்தகிரியில் உள்ள புனித அந்தோணியார் நிதி உதவி பெறும் துவக்க பள்ளியில் திட்டத்தை மாவட்ட ஆட்சியர் சரயு தலைமையில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத், ஆகியோர் திட்டத்தை துவக்கி வைத்து, மாணவ, மாணவிகளுக்கு காலை உணவை வழங்கி அவர்களுடன் அமர்ந்து சாப்பிட்டனர். இந்த நிகழ்ச்சியில் பள்ளியின் தாளாளர் தேவசகாயம், மாநில விவசாய அணி துணை செயலாளர் வெங்கடேசன், மாவட்ட துணை செயலாளர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம், நாகராஜ், பாலன் ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர்.



திருச்சி தெற்கு மாவட்ட கழக, பொதுக்குழு உறுப்பினர்கள் நடத்தும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கலைஞரை உலகம் புகழ பெரிதும் காரணம் எழுதுகோலா ? செங்கோலா? என்ற தலைப்பில் கலை மாமணி சொல்வேந்தர் சுகிசிவம் அவர்கள் தலைமையில் பட்டிமன்றம் நடைபெற்றது. பொதுக்குழு உறுப்பினர்கள் பன்னீர்செல்வம், சண்முகம், தனசேகரன் ஆகியோர் வரவேற்றுப் பேசினர். திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையேற்று பட்டிமன்றத்தை துவக்கி வைத்தார். நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு உரையாற்றினார். மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், பகுதி கழகச் செயலாளர் மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ராஜேஸ்வரன், கார்த்தி, மணிமேகலை ராஜபாண்டி ஆகியோர் நன்றி கூறினர். எழுதுகோலே என்ற தலைப்பில் செந்தமிழ்ச் செல்வி திருமதி சாந்தாமணி, சிந்தனைச் செல்வர் சிவசக்தி வடிவேல், சொல் அரசி பேராசிரியர் பர்வீன் சுல்தானா, செங்கோல என்ற தலைப்பில் முனைவர் திருமதி எழிலரசி, நகைச்சுவை நயாகரா மோகனசுந்தரம், திருச்சி நீலகண்டன் ஆகியோர் கலந்து கொண்டு பட்டி மன்றத்தில் உரையாற்றினர்.

## விண்ணப்பித்த அனைவருக்கும் 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' வழங்கல்!

# சொன்னதை மட்டும் அல்ல; சொல்லாததையும் செய்யும் சாதனை அரசு!

### 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜூலை 18 -

விண்ணப்பித்த அனைத்து பெண்களுக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த அரசு, சொன்னதை மட்டுமல்ல; சொல்லாததையும் செய்யும் சாதனை அரசாக உள்ளதாக 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது குறித்து 16.07.2024 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:

ஆட்சிக்கு வந்ததும், விடியல் பயணத் திட்டம், கொரோனா நிவாரண உதவித்தொகை ரூ.4,000ம் வழங்கும் திட்டம், முதல்வரின் முகவரித்துறை உருவாக்கும் திட்டம் என 5 திட்டங்களுக்கு முதல் கையெழுத்தை மு.க.ஸ்டாலின் போட்டார். தொடர்ந்து ஆவடி, தாம்பரம் புதிய காவல் ஆணையரகங்கள், போலீசாருக்கு வாரம் ஒரு நாள் விடுமுறை, மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2 ஆயிரம் மாதாந்திர உதவித்தொகை என அறிவிக்கப்பட்டது. ஆசிய அளவிலேயே பெரியதாக மதுரையில் ரூ.114 கோடியில் உயர் தொழில்நுட்பத்துடன் கலைஞர் நூலகம் அமைக்கப்பட்டது. வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை முதன்முறையாக அறிமுகமானது.

கூட்டுறவு நிறுவனங்களில் 5 பவுனுக்குள் நகைக்கடன் பெற்று நிலுவையில் இருந்த ரூ.4818.88 கோடி தள்ளுபடி



தினகரன்

சாதனை அரசு

செய்யப்பட்டது. ரூ.2755.99 கோடி மகளிர் சுயஉதவிக்குழு கடன் தள்ளுபடியானது. சார்பதிவாளர் அலுவலகங்கள் சனிக்கிழமையும் செயல்பட அனுமதி அளிக்கப்பட்டது. மகளிருக்கு கட்டணமில்லாத இலவச பேருந்து சேவை என்பது ஏழை பெண்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. தேர்வாணையத்தின் அனைத்து தேர்வுகளிலும் தமிழ் மொழி தகுதித்தேர்வு கட்டாயமாக்கப்பட்டது. இல்லம் தேடி கல்வித் திட்டம் தொடங்கப்பட்டது. இது போன்று இன்னும் ஏராளமான திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

தற்போது அனைத்து அரசு தொடக்கப்பள்ளி குழந்தைகளுக்கு கடந்த 2022ம் ஆண்டு முதல்வரின் காலை உணவு திட்டம் தொடங்கப்பட்டது. தற்போது இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு 3,995 அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 2 லட்சத்து 29 ஆயிரத்து 539 குழந்தைகள் பயனடைகின்றனர். அந்த வரிசையில் பெண்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்கும் வகையில் தமிழக அரசு சார்பில் `கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்' தொடங்கப்பட்டது. இது பெண்கள் மத்தியில் பெரிய வரப்பிரசாதமாக அமைந்தது.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்துக்கு 2024-25ம் நிதியாண்டில் ரூ.13,722 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இந்த திட்டத்தின் மூலமாக, மாநிலம் முழுவதும் 1.13 கோடி பயனாளிகளுக்கு ஒவ்வொரு மாதமும் அவர்களது வங்கிக்கணக்கில் ரூ.1,000 செலுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்த திட்டத்தில் விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்டவர்கள் மேல்முறையீடு செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டது. இந்நிலையில் தமிழகத்தில் மகளிர் உரிமைத்தொகைக்கு மேல்முறையீடு செய்த மேலும் 1.48 லட்சம் மகளிருக்கு ரூ.1,000 உரிமைத் தொகை கிடைக்கும் என்று சட்டசபையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பம் நிராகரிக்க ப்பட்டவர்கள் 30 நாட்களுக்குள் இ-சேவை மையம் மூலம் மேல்முறையீடு செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. இத்திட்டத்தில் பயனடையும் வகையில், நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது சட்டசபையின் மானிய கோரிக்கை தொடர்பான விவாதங்களின் போது மகளிர் உரிமைத்தொகை திட்டம் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 1.48 லட்சம் மகளிருக்கு உரிமைத்தொகை வரவு வைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் மேலும் 1.48 லட்சம் பேருக்கு ரூ.1,000 உரிமைத்தொகை வரவு வைக்கப்பட்டது. கடந்த மாதம் வரை 1 கோடியே 13 லட்சம் மகளிர் பயன்பெறும் நிலையில் உரிமைத்தொகை வழங்கப்பட்டது. தற்போது கூடுதலாக 1.48 லட்சம் மகளிருக்கு உரிமைத் தொகை நேற்று வழங்கப் பட்டது.

விண்ணப்பித்த அனைத்து பெண்களுக்கும் கிடைத்ததால் பெருமகிழ்ச்சி அடைந்தனர். இதனால் இந்த அரசு சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்யும் சாதனை அரசாக செயல்படுகிறது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தொ.மு.ச. இணைப்பு சங்கமான சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கப் பொதுச்செயலாளர் த.சரவணகுமார், சங்கப் பொருளாளர் கி.சீனிவாசன் ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 16.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தென்காசி வடக்கு மாவட்டம், குருக்கள் பட்டியைச் சேர்ந்த த.வெள்ளத்துரை அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 16.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



திருவாரூர் மாவட்டத்தில், தப்பளாம்புலியூர் ஊராட்சியில் ஸ்ரீ கிருஷ்ணா அரசு உதவிபெறும் நடுநிலைப்பள்ளியில் விரிவுப்படுத்தபட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தொடக்க விழாவில் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணன், மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் ஏ.தேவா ஆகியோர் பங்கேற்றனர்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க மாநகரம் தலைவர் கலைஞரின் 10 | வது பிறந்த தினத்தையொட்டி அம்மாபேட்டை பேரறிஞர் அண்ணா நற்பணி மன்றத்தின் சார்பில் '200 மாணவி களுக்கு எவர்சிவர் கப்பை மாவட்ட கழக செயலாளர். இரா. இராஜேந்திரன் எம்.எல். ஏ வழங்கினார் உடன் மாவட்ட அவைத் தலைவர் ஜி. கே. சுபாஷ், பொருளாளர் மு. கார்த்திகேயன், பகுதி செயலாளர் கே.டி. ஆர்.தனசேகரன், நற்பணி மன்ற செயலாளர் கே. குமாரசாமி தலைவர் பொட்டு பி. சேகர், பொருளாளர் பொட்டு எம். ஞானசேகரன், தொழில் அதிபர் ஆர்.ஏ.ஆர்.துரைசாமி, ஆசிரியர் செவ்வேள், கே.கலைசெல்வன், எம்.ஏ. இளங்கோவன், பழனிவேல், கிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.